**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு**

முன்னிலை: **திரு. பெ.சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு

2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் தேதி திங்கட்கிழமை

(2055 திருவள்ளுவராண்டு, சுபகிருது வருடம், மாசி மாதம் 28 ஆம் நாள்)

**அ.வ.எண்.45/2021**

**CNR.No.TNTJ15000772021**

1. சம்மந்தமூர்த்தி ...**வாதி**

/எதிர்/

1. ராமமூர்த்தி

2.சத்தியமூர்த்தி ...**பிரதிவாதிகள்**

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 29.06.2022 ஆம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதி விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஸ்வநாதன் அவர்கள் ஆஜராகியும் 1,2 பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் அழைப்பாணை அனுப்பி அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றா தரப்பினர்களாக பிறப்பிக்கப்பட்டும் வாதி தரப்பு வாதத்தைக் கேட்டும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலணை செய்தும் இன்று இந்நீதிமன்றம் ஒருதலைபட்சமாக வழங்கும்

தீர்ப்புரை

வாதிகள் இவ்வழக்கை பிரதிவாதிகளோ அவர்களுடைய ஆட்களோ வாதிகளுக்கு தாவா சொத்தில் உள்ள அமைதியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை வழங்க கோரி தாக்கல் செய்துள்ளனர்.

**2.வழக்குரையின் சுருக்கம்:**

(I) இந்த வழக்கின் வாதி. வாதி நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். இந்த பிரதிவாதிகள் மனுதாரரது

இளைய சகோதரர்கள் இந்த தாவா சொத்து திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோவிலுக்கு சொந்தமான சாகுபடி நஞ்சை நிலமாகும். வருவாய் கணக்குகளில் தாவா நிலம் புஞ்சை என வகைப்பாடு செய்யபட்டிருந்தாலும் பூஸ்ததியில் அது நஞ்சையாக உள்ளதாகவும், இந்த தாவா சொத்து ஆதியில் மனுதாரரது தகப்பனாரை பெற்ற பாட்டனார் சிங்காரவேலு சொத்தபிரார் அவர்களது குத்தகை சாகுபடியில் இருந்து வந்தது. அவர் தாவா நிலத்தை தமது உடல் உழைப்பைக் கொண்டு சாகுபடி செய்துவந்தார். அதன்பிறகு வயோதிகத்தின் காரணமாக அவரால் சாகுபடி காரியங்களை செய்யமுடியவில்லை. எனவே தாவா நிலத்தை மனுதாரர் வசம் ஒப்படைத்து சாகுபடி செய்து குத்தகையை மேற்படி கோவிலுக்கு செலுத்துமாறு சொல்லியிருந்தார். அதன்படி மனுதாரர் தாவா நிலத்தை சாகுபடி செய்து கோவிலுக்கு செலுத்த வேண்டிய குத்தகையை செலுத்திவந்தேன் அதன்பிறகு மனுதாரரது தாத்தா சிங்காரவேலு கொத்தபிரார் கடந்த 28.01.1993 தேதியில் தாவா நிலங்களின் குத்தகை உரிமையை மனுதாரருக்கு உயில்மூலம் எழுதிக் கொடுத்துவிட்டார். மனுதாரரது தாத்தா சிங்காரவேலு கொத்தபிரார் கடந்த 03.12.1993 தேதியில் இறந்துவிட்டார். அவர் காலமானபிறகு தாவா சொத்தை மனுதாரர் மனுதாரரது உடல் உழைப்பின் மூலம் சாகுபடி செய்து குத்தகையை அளந்து வருவதாகவும், அதன்பிறகு மனுதாரரது பெயரை குத்தகை உரிமை பதிவேட்டில் புதிய திருவையாறு குத்தகை பதிவு அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அவர்களிடம் மனு கொடுத்து அந்த மனு படிவம் 5ல் 17/1994 என கோப்புக்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அந்த விசாரணையின் போது மனுதாரரது சித்தப்பாவும் தாவா நிலங்களில் குத்தகை உரிமை கோரி வட்டாட்சியரிடம் வழக்கு நடத்தினார் என்றும் இருதரப்பு வாதங்களும் கேட்டு மனுதாரர் கோரியுள்ள மனுதாரரது பெயருக்கு குத்தகை பதிவு 17.10.1994 தேதியில் பதிவு செய்யப்பட்டது.

(ii) அதன்பிறகு மனுதாரர் தொடர்ந்து தாவா நிலங்களை சாகுபடி செய்து கோவிலுக்கு குத்தகை செலுத்திவருவதாகவும், தாவா நிலங்களுக்கு குத்தகை வருடத்திற்கு 12 மூட்டை நெல் ஆகும். தாவா நிலம் புஞ்சை வகைபாட்டை சேர்ந்ததால் அதற்கு பாசன வசதி கிடையாது எனவே மிகவும் சிரமப்பட்டு அன்டை

வயல்களிலிருந்து தாவா நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சி சாகுபடி செய்து வருவதாகவும், தாவா சொத்தில் மனுதாரர் நெல் மற்றும் வாழை சாகுபடி செய்து வழக்கம் பருவமழை பொய்த்ததாலும் தண்ணீர் வசதி இல்லாததாலும் குத்தகை சரிவர செலுத்த இயலவில்லை. எனவே கோவில் நிர்வாகம் மனுதாரர் மீது குத்தகை பாக்கிகோரி வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள் மேலும் குத்தகை பாக்கிகோரி 29.07.2019 தேதியில் கோவிலின் நிர்வாக அதிகாரி மனுதாரருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

(iii) தாவா நிலத்திற்கான அரசு தீர்வையையும் மனுதாரர் செலுத்துவதுண்டு அவ்வாறு செலுத்தப்படும் தீர்வையை கோவில் நிர்வாகம் குத்தகையில் கழித்துக் கொள்வது வழக்கம். பாசன வசதி இல்லாததால் கடந்த இரண்டு ஆண்டுகளாக தாவா சொத்தில் சாகுபடி செய்ய இயலவில்லை எனவே கோவில் நிர்வாகத்திடம் தாவா சொத்தில் ஆழ்குழாய் கிணறு அமைக்க அனுமதி கோரியுள்ளார். இந்த பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் கிடையாது, பிரதிவாதிகள் மனுதாரருடன் சுமூகமான உறவில் இல்லை. மனுதாரர் அவர்கள் மீது பாகவழக்கு தொடர்ந்து அது நிலுவையில் உள்ளது. இதனால் கோபமுற்ற பிரதிவாதிகள் தாவா சொத்தினை மனுதாரர் அமைதியாக அனுபவிக்க விடாமல் பலவிதத்திலும் மனுதாரருக்கு தொல்லை கொடுத்துவருகின்றனர். கடந்த 01.04.2021 அன்று தாவா சொத்தில் ஆழ்குழாய் கிணறு அமைக்க ஒரு பகுதியை சமன் செய்து கொண்டிருந்தபோது இந்த பிரதிவாதிகள் அவர்களது ஆட்களுடன் வந்து வேலையை தடுத்து நிறுத்த முயற்சித்தனர். அவர்கள் தாவா சொத்தில் தங்களுக்கும் குத்தகை உரிமை இருப்பதாக பாத்தியம் கொண்டாடினார். மனுதாரர் மனுதாரது ஊர்காரர்கள் உதவியுடன் அவர்களது முயற்சியை முறியடித்துவிட்டதாகவும், அதன்பிறகு திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அதற்கு காவல் நிலையத்தில் மனுதாரருக்கு ரசீதும் கொடுத்துள்ளார்கள் என்றும் ஆனால் அதுசிவில் வாக்கு என்று சொல்லி நடவடிக்கை எடுக்க மறுத்துவிட்டனர். காவல் நிலையத்தார் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் இந்த பிரதிவாதிகள் மீண்டும் மீண்டும் மனுதார அனுபவத்தில் தலையிட முயற்சிப்பார்கள் என்று அஞ்சுவதாகவும், எனவே இந் பிரதிவாதிகள் தாவா சொத்தினை மனுதாரர் அமைதியாக அனுபவிப்பதை

எந்தவிதத்திலும் தடை செய்யாமல் இருக்கும் வன்னம் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உத்தரவு பரிகாரத்திற்கு ஒரு தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்க வேண்டியது அவசியமும், நியாயமுமாகிறது இல்லாதுபோனால் மனுதாரருக்கு அனேக கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் எனவே தாவா சொத்தினை வாதிகளின் அமைதியான முறையில் அனுபவிப்பதை இந்த பிரதிவாதிகள் எவ்வித்திலும் தடைசெய்யாமல் இருக்கும் வண்ணம் நிறந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு ஒரு தீர்பும் தீர்பானையும் வழங்கவேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

3. 1,2 பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் அழைப்பாணை அனுப்பி அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் தோன்றா தரப்பினர்களாக பிறப்பிக்கப்பட்டும் உத்தரவிடப்பட்டுள்ளனர்.

4. வாதி தரப்பில் வா.சா.1 ஆகவும் விசாரிக்கப்பட்டு வா.சா.1 மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள இந்த பிரதிவாதிகள் மனுதாரரது இளைய சகோதரர்கள் இந்த தாவா சொத்து திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோவிலுக்கு சொந்தமான சாகுபடி நஞ்சை நிலமாகும். வருவாய் கணக்குகளில் தாவா நிலம் புஞ்சை என வகைப்பாடு செய்யபட்டிருந்தாலும் பூஸ்ததியில் அது நஞ்சையாக உள்ளதாகவும், இந்த தாவா சொத்து ஆதியில் மனுதாரரது தகப்பனாரை பெற்ற பாட்டனார் சிங்காரவேலு சொத்தபிரார் அவர்களது குத்தகை சாகுபடியில் இருந்து வந்தது. அவர் தாவா நிலத்தை தமது உடல் உழைப்பைக் கொண்டு சாகுபடி செய்துவந்தார். அதன்பிறகு வயோதிகத்தின் காரணமாக அவரால் சாகுபடி காரியங்களை செய்யமுடியவில்லை. எனவே தாவா நிலத்தை மனுதாரர் வசம் ஒப்படைத்து சாகுபடி செய்து குத்தகையை மேற்படி கோவிலுக்கு செலுத்துமாறு சொல்லியிருந்தார். அதன்படி மனுதாரர் தாவா நிலத்தை சாகுபடி செய்து கோவிலுக்கு செலுத்த வேண்டிய குத்தகையை செலுத்திவந்தேன் அதன்பிறகு மனுதாரரது தாத்தா சிங்காரவேலு கொத்தபிரார் கடந்த 28.01.1993 தேதியில் தாவா நிலங்களின் குத்தகை உரிமையை மனுதாரருக்கு உயில்மூலம் எழுதிக் கொடுத்துவிட்டார். மனுதாரரது தாத்தா சிங்காரவேலு கொத்தபிரார் கடந்த 03.12.1993 தேதியில் இறந்துவிட்டார். அவர்

காலமானபிறகு தாவா சொத்தை மனுதாரர் மனுதாரரது உடல் உழைப்பின் மூலம் சாகுபடி செய்து குத்தகையை அளந்து வருவதாகவும், அதன்பிறகு மனுதாரரது பெயரை குத்தகை உரிமை பதிவேட்டில் புதிய திருவையாறு குத்தகை பதிவு அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அவர்களிடம் மனு கொடுத்து அந்த மனு படிவம் 5ல் 17/1994 என கோப்புக்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அந்த விசாரணையின் போது மனுதாரரது சித்தப்பாவும் தாவா நிலங்களில் குத்தகை உரிமை கோரி வட்டாட்சியரிடம் வழக்கு நடத்தினார் என்றும் இருதரப்பு வாதங்களும் கேட்டு மனுதாரர் கோரியுள்ள மனுதாரரது பெயருக்கு குத்தகை பதிவு 17.10.1994 தேதியில் பதிவு செய்யப்பட்டது.

(ii) அதன்பிறகு மனுதாரர் தொடர்ந்து தாவா நிலங்களை சாகுபடி செய்து கோவிலுக்கு குத்தகை செலுத்திவருவதாகவும், தாவா நிலங்களுக்கு குத்தகை வருடத்திற்கு 12 மூட்டை நெல் ஆகும். தாவா நிலம் புஞ்சை வகைபாட்டை சேர்ந்ததால் அதற்கு பாசன வசதி கிடையாது எனவே மிகவும் சிரமப்பட்டு அன்டை வயல்களிலிருந்து தாவா நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சி சாகுபடி செய்து வருவதாகவும், தாவா சொத்தில் மனுதாரர் நெல் மற்றும் வாழை சாகுபடி செய்து வழக்கம் பருவமழை பொய்த்ததாலும் தண்ணீர் வசதி இல்லாததாலும் குத்தகை சரிவர செலுத்த இயலவில்லை. எனவே கோவில் நிர்வாகம் மனுதாரர் மீது குத்தகை பாக்கிகோரி வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள் மேலும் குத்தகை பாக்கிகோரி 29.07.2019 தேதியில் கோவிலின் நிர்வாக அதிகாரி மனுதாரருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

(iii) தாவா நிலத்திற்கான அரசு தீர்வையையும் மனுதாரர் செலுத்துவதுண்டு அவ்வாறு செலுத்தப்படும் தீர்வையை கோவில் நிர்வாகம் குத்தகையில் கழித்துக் கொள்வது வழக்கம். பாசன வசதி இல்லாததால் கடந்த இரண்டு ஆண்டுகளாக தாவா சொத்தில் சாகுபடி செய்ய இயலவில்லை எனவே கோவில் நிர்வாகத்திடம் தாவா சொத்தில் ஆழ்குழாய் கிணறு அமைக்க அனுமதி கோரியுள்ளார். இந்த பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் கிடையாது, பிரதிவாதிகள் மனுதாரருடன் சுமூகமான உறவில் இல்லை. மனுதாரர் அவர்கள் மீது பாகவழக்கு

தொடர்ந்து அது நிலுவையில் உள்ளது. இதனால் கோபமுற்ற பிரதிவாதிகள் தாவா சொத்தினை மனுதாரர் அமைதியாக அனுபவிக்க விடாமல் பலவிதத்திலும் மனுதாரருக்கு தொல்லை கொடுத்துவருகின்றனர். கடந்த 01.04.2021 அன்று தாவா சொத்தில் ஆழ்குழாய் கிணறு அமைக்க ஒரு பகுதியை சமன் செய்து கொண்டிருந்தபோது இந்த பிரதிவாதிகள் அவர்களது ஆட்களுடன் வந்து வேலையை தடுத்து நிறுத்த முயற்சித்தனர். அவர்கள் தாவா சொத்தில் தங்களுக்கும் குத்தகை உரிமை இருப்பதாக பாத்தியம் கொண்டாடினார். மனுதாரர் மனுதாரரது ஊர்காரர்கள் உதவியுடன் அவர்களது முயற்சியை முறியடித்துவிட்டதாகவும், அதன்பிறகு திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அதற்கு காவல் நிலையத்தில் மனுதாரருக்கு ரசீதும் கொடுத்துள்ளார்கள் என்றும் ஆனால் அதுசிவில் வாக்கு என்று சொல்லி நடவடிக்கை எடுக்க மறுத்துவிட்டனர். காவல் நிலையத்தார் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் இந்த பிரதிவாதிகள் மீண்டும் மீண்டும் மனுதார அனுபவத்தில் தலையிட முயற்சிப்பார்கள் என்று அஞ்சுவதாகவும், எனவே இந் பிரதிவாதிகள் தாவா சொத்தினை மனுதாரர் அமைதியாக அனுபவிப்பதை எந்தவிதத்திலும் தடை செய்யாமல் இருக்கும் வன்னம் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உத்தரவு பரிகாரத்திற்கு ஒரு தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்க வேண்டியது அவசியமும், நியாயமுமாகிறது இல்லாதுபோனால் மனுதாரருக்கு அனேக கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் எனவே தாவா சொத்தினை வாதிகளின் அமைதியான முறையில் அனுபவிப்பதை இந்த பிரதிவாதிகள் எவ்வித்திலும் தடைசெய்யாமல் இருக்கும் வண்ணம் நிறந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு ஒரு தீர்பும் தீர்பானையும் வழங்கவேண்டுமென்று கோரி 16.04.2019 தேதியிட்ட கோவில் நிர்வாக அலுவலர் வாதிக்கு அனுப்பிய கடிதம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும் 17.02.2017 தேதியிட்ட வாதி தாவா நிலத்திற்கு செலுத்திய கிஸ்தி ரசீது அசல். வா.சா.ஆ.2 ஆகவும் 22.03.2017 கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ.3 ஆகவும் 26..10.1992 கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ.4 ஆகவும் 21.10.1992 கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 29.11.1993 கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ.6 ஆகவும், 26.04.2012 வாதி கோவிலுக்கு குத்தகை செலுத்திய ரசீது அசல் வா.சா.ஆ.7 ஆகவும், 24.04.2012 வாதி கோவிலுக்கு குத்தகை செலுத்திய ரசீது அசல்

வா.சா.ஆ.8 ஆகவும், 29.03.2018 வாதி கோவிலுக்கு குத்தகை செலுத்திய ரசீது அசல் வா.சா.ஆ.9 ஆகவும், 01.04.2021 தேதியிட்ட திருக்காட்டுப்பள்ளி காவல் நிலைய மனு ரசீது வா.சா.ஆ.10 ஆகவும் 28.02.2018 தேதியிட்ட கோவில் நிர்வாகம் வாதிக்கு கொடுத்த பலவகை ரசீது அசல் வா.சா.ஆ.11 ஆகவும் 05.03.2022 தேதியிட்ட கோவில் நிர்வாகம் வாதிக்கு கொடுத்த பலவகை ரசீது வா.சா.ஆ.12 ஆகவும் 23.03.2022 தேதியிட்ட கோவில் நிர்வாகம் வாதிக்கு கொடுத்த பலவகை ரசீது அசல் 2 எண்ணிக்கை . வா.சா.ஆ.13 ஆகவும் 02.02.2018 தேதியிட்ட தஞ்சாவூர் வருவாய் நீதிமன்றம் தனி துணை ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை அசல் வா.சா.ஆ.14 ஆகவும், 29.11.1993 மற்றும் 10.02.1994 ஆகிய தேதிகளில் வாதி செலுத்திய கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ.15 ஆகவும், 17.10.1994 தேதியிட்ட திருவையாறு வட்டாட்சியர் வழங்கிய குத்தகை உரிமை பதிவு உத்தரவு அசல் வா.சா.ஆ.16 ( இந்த ஆணத்தை வைத்து உரிமை மூலம் கோர முடியாது என்று பிரதிவாதி தரப்பு ஆட்சோபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலமும் வா.சா.ஆ.2 முதல் 9 வரை தாக்கல் செய்யப்பட்டுள்ள கோவிலில் வழங்கப்பட்ட பலவகை ரசீதுகள் மூலமும் வா.சா.ஆ 16 ஆவணத்தின் மூலம் வாதிக்கு திருவையாறு வட்டாட்சியர் வழங்கிய குத்தகை உரிமை பதிவு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தாவா சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் உள்ளதையும் அறிய முடிகிறது. வாதிகள் அளித்துள்ள வா.சா.1 தாக்கல் செய்துள்ள ஆவணங்களான 1 மற்றும் 10 முதல் 15 ஆகியவற்றின் மூலம் தாவா சொத்து வாதிகளின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ளது என்பது தெரியவருகிறது. தாவா சொத்து வாதிகளுக்கு உரிமையானது எனவும் தாவா சொத்தை அவர்கள் தான் அனுபவித்து வருவதாகவும் தாவா சொத்தில் அவர்களுக்கு உள்ள அமைதியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்து வருவதாகவும் வாதிகள் அவர்கள் தரப்பு வழக்கை வலியுறுத்தி நிரூபண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளனர்.

7. **பிரதிவாதிகள் இந்த வழக்கில் ஆஜராகிவிட்டு வாதிகள் கூறியுள்ள சங்கதிகளை மறுப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.**

8. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் உள்ள அனுபவம் மற்றும் சுவாதீனத்திற்கு பிரதிவாதிகள் இடையூறு ஏற்படுத்தி இருப்பதை வாதிகள் நிரூபித்துள்ளதால் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில், வாதிகளுக்கு தாவா சொத்தில் உள்ள அமைதியான அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் பிரதிவாதிகளோ அவர்களுடைய ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை வழங்கி செலவுத்தொகையின்றி தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் தேதியாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/–பெ.சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**திருவையாறு**

**வாதிகள் தரப்பு சாட்சிகள்:**

வா.சா.1. சம்மந்தமூர்த்தி

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

1) 16.04.2019 தேதியிட்ட கோவில் நிர்வாக அலுவலர் வாதிக்கு அனுப்பிய கடிதம் அசல் வா.சா.ஆ.1

2) 17.02.2017 தேதியிட்ட வாதி தாவா நிலத்திற்கு செலுத்திய கிஸ்தி ரசீது அசல். வா.சா.ஆ.2

3) 22.03.2017 கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ.3

4) 26.10.1992 கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ.4.

5) 21.10.1992 கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ.5.

6) 29.11.1993 கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ.6.

7) 26.04.2012 வாதி கோவிலுக்கு குத்தகை செலுத்திய ரசீது அசல் வா.சா.ஆ.7.

8) 24.04.2012 வாதி கோவிலுக்கு குத்தகை செலுத்திய ரசீது அசல் வா.சா.ஆ.8.

9) 29.03.2018 வாதி கோவிலுக்கு குத்தகை செலுத்திய ரசீது அசல் வா.சா.ஆ 9

10) 01.04.2021 தேதியிட்ட திருக்காட்டுப்பள்ளி காவல் நிலைய மனு ரசீது வா.சா.ஆ 10

11) 28.02.2018 தேதியிட்ட கோவில் நிர்வாகம் வாதிக்கு கொடுத்த பலவகை ரசீது அசல் வா.சா.ஆ.11

12) 05.03.2022 தேதியிட்ட கோவில் நிர்வாகம் வாதிக்கு கொடுத்த பலவகை ரசீது வா.சா.ஆ.12

13)23.03.2022 தேதியிட்ட கோவில் நிர்வாகம் வாதிக்கு கொடுத்த பலவகை ரசீது அசல் 2 எண்ணிக்கை . வா.சா.ஆ.13

14) 02.02.2018 தேதியிட்ட தஞ்சாவூர் வருவாய் நீதிமன்றம் தனி துணை ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை அசல் வா.சா.ஆ.14

15)29.11.1993 மற்றும் 10.02.1994 ஆகிய தேதிகளில் வாதி செலுத்திய கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ.15

16) 17.10.1994 தேதியிட்ட திருவையாறு வட்டாட்சியர் வழங்கிய குத்தகை உரிமை பதிவு உத்தரவு அசல் வா.சா.ஆ.16 ( இந்த ஆணத்தை வைத்து உரிமை மூலம் கோர முடியாது என்று பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

ஒம்/-**பெ.சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**திருவையாறு.**